# ECHO OF HIS CALL

# அழைப்பின் எதிரொலி

Tamil

₹ 10/-

India's National Spiritual Newspaper

Published monthly in ENGLISH, TAMIL, MALAYALAM, TELUGU, HINDI, KANNADA, MARATHI, BENGALI, GUJARATI, ODIYA, ASSAMESE, PUNJABI, NEPALI, URDU, SINHALA & AFRIKAN

Editor : S. SAM SELVA RAJ | 16 Languages | Senior Associate Editor: Dr. SERENA BEVIN

Vol. XXX YEAR OF OUR LORD JESUS CHRIST, 2025 JANUARY No. 01


## பரிசுத்த வேதாகமம்

இப்பகுதியை மனப்பாடம் செய்யவும்

### சங்கீதம் 101:1-8

1. இரக்கத்தையும் நியாயத்தையும் குறித்துப் பாடுவேன்; கர்த்தாவே, உம்மைக் கீர்த்தனம் பண்ணுவேன்.
2. உத்தமமான வழியிலே விவேகமாய் நடப்பேன்; எப்பொழுது என்னிடத்தில் வருவீர்! என் வீட்டிலே உத்தம இரு–தயத்தோடு நடந்துகொள்ளுவேன்.
3. தீங்கான காரியத்தை என் கண் முன் வைக்கமாட்டேன்; வழி விலகுகிறவர்களின் செய்கையை வெறுக்கிறேன்; அது என்னைப் பற்றாது.
4. மாறுபாடான இருதயம் என்னை விட்டு அகலவேண்டும்; பொல்லாதவனை அறியமாட்டேன்.
5. பிறனை இரகசியமாய் அவதூறு பண்ணுகிறவனைச் சங்கரிப்பேன்; மேட்டிமைக் கண்ணனையும் பெருநெஞ்சுள்ளவனையும் பொறுக்கமாட்டேன்.
6. தேசத்தில் உண்மையானவர்கள் என்னோடே வாசம்பண்ணும்படி என் கண்கள் அவர்கள்மேல் நோக்கமாயிருக்கும்; உத்தமமான வழியில் நடக்கிறவன் என்னைச் சேவிப்பான்.
7. கபடுசெய்கிறவன் என் வீட்டுக்குள் இருப்பதில்லை; பொய்சொல்லுகிறவன் என் கண்முன் நிலைப்பதில்லை.
8. அக்கிரமக்காரர் ஒருவரும் கர்த்தருடைய நகரத்தில் இராதபடி வேர் அறுப்புண்டுபோக, தேசத்திலுள்ள அக்கிரமக்காரர் யாவரையும் அதிகாலமே சங்கரிப்பேன்.

# ஆண்டவர்

## உங்களுக்கு அளித்த வாக்குத்தத்தங்களை நினைவுகூருவார்!

*Rev.* ஏஞ்சலின் செல்வகுமாரி, *Hon. Editor-in-Chief*



**அழைப்பின் எதிரொலி** குடும்பத்தார் அனைவருக்கும் அன்பின் புத்தாண்டு வாழ்த்துக்கள்.

தேவன் உங்களையும், உங்கள் குடும்பத்தையும், நீங்கள் அவருக்குச் செய்யும் நற்கிரியைகளையும் நினைவு கூரும் ஒரு ஆண்டாக இருக்கட்டும் என்று ஜெபிக்கிறேன்.

நம்முடைய தேவன் வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுகிறவர். ... **'நான் உனக்குச் சொன்னதைச் செய்யுமளவும் உன்னைக் கைவிடுவதில்லை'** ... ஆதியாகமம் 28:15 என்று கூறியுள்ளார். தேவன் ஒரு வாக்குத்தத்தத்தையளிக்கும்போது, அதை ஏற்ற வேளையில், நிறைவேற்றுகிறவராயிருக்கிறார். அவரது ஏற்ற நேரம், ஒரு நாளோ, வாரமோ, ஒரு வருடமோ, ஏன் தலைமுறைகளோ கடந்தவைகளாக இருக்கலாம். அவரது வாக்குத்தத்தம் நிறைவேறியே தீரும். 2025–ம் ஆண்டு தேவனுடைய வாக்குத்தத்தங்கள் உங்களுடைய வாழ்க்கையில் நிறைவேறுகின்ற ஏற்ற சமயமாக (Kairos) இருக்கவேண்டுமென்று ஜெபிக்கிறேன்.

### நம்பிக்கையற்ற நேரங்கள் ஊக்கமாக ஜெபத்திற்கு அழைக்கின்றன!

தேவன் உங்களுக்கு ஒரு வாக்குத்தத்தத்தையளிக்கும்போது அது நிறைவேறும் வரை ஜெபத்தில் உறுதியாய்த் தரித்திருங்கள். அநேகமுறை நம் வாழ்வில் வரும் நம்பிக்கை

தொடர்ச்சி 3–ம் பக்கம்.....


அழைப்பின் எதிரொலி!



கிறிஸ்தவ யூடியூப் சானல்!

போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களுடன்
நேரடியாக ஜெபிக்க ஓர் நல்வாய்ப்பு!!
5 நிமிடத்தில் தேவ செய்தியும், ஜெபமும்!!
தமிழ், ஆங்கிலம், இந்தி & தெலுங்கு
தினந்தோறும் – காலை 2.00 மணியில் இருந்து
தமிழ் ஞாயிறு ஆராதனை – காலை 8.30 மணிக்கு
* பதிவு செய்யுங்கள் – பிறருக்கும் பகிருங்கள் *

ECHO OF HIS CALL - (1969-2019 GOLDEN JUBILEE YEAR)

REACHING NATIONS

# உங்கள் அன்பு சகோதரனிடமிருந்து...





### OUR MISSION POLICY

We should expound and teach the contemporary generation the undiluted teachings of the ancient and early Apostles. It is the need of the hour.

HON. EDITOR-IN-CHIEF
Rev. Angeline S. Kumari, M.A., M.Sc., M.Ed.
HON. MANAGING EDITOR
Pastor Alex Samson Sam, B.Th., M.Div.
GENERAL MANAGER
Bro. N. Prakasam, M.A., M.Sc.(C&P), PGDHRM, MBA.
ADMINISTRATION
Sis. Jesy Veena Sam
Adv. K. Puratchivendan, M.Com., C.A., B.L.
Dr. P.E.R. Premchand, M.Sc., M.A., M.Ed., Ph.D.
Dr. C.G.S. Baburao, B.Tech., M.Tech. (DM), Ph.D.
Dr. Rabinder Boaz, M.S. (CMC)
EDITORIAL BOARD
Dr. Serena Bevin, M.A., M.Phil., B.Ed.
Sis. Sajini Cherian
Rev. Dr. K.R. Rajasekaran
Rev. Dr. William Robert, Ph.D., DD, D.Lit.

EDITOR, PUBLISHER & PRINTER
Pastor S. SAM SELVA RAJ
Echo of His Call Printers
10, Mohammed Abdullah 2nd Street,
Chepauk, Chennai- 600 005, India.
Phone : (+ 91- 44) 2852 8282, 2852 9293, 2854 7766
Cell : (+91) 98410 71852, 98412 71858
95661 31858
E.MAIL
sam@echoofhiscall.org
biblecor@yahoo.co.in
WEBSITES
www.echoofhiscall.org
www.stpaulsmatriculation.com
YOUTUBE CHANNEL
Echo of His Call

... உன் களஞ்சியங்கள் பூரணமாய் நிரம்பும்; உன் ஆலைகளில் திராட்சரசம் புரண்டோடும். – நீதிமொழிகள் 3:10

கர்த்தருக்குள் மிகவும் பிரியமான தேவ பிள்ளைகளே!

உங்களுக்கு எங்கள் நல்வாழ்த்துக்கள். உங்கள் அனுதினப் பாதுகாப்பிற்காகவும், நல்வாழ்வுக்காகவும் தொடர்ந்து நாங்கள் ஜெபிக்கிறோம். கடந்த ஆண்டு முழுவதும் நீங்கள் எங்களுக்காக மனமுவந்து ஏறெடுத்த ஊக்கமான ஜெபங்களுக்காகவும், நல்கிய ஒத்தாசைகளுக்காகவும் நன்றி தெரிவிக்கிறோம். நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்? அதாவது, நலமுடன் இருக்கிறீர்களா?

கடந்த ஆண்டில் நமது ஊழியப்பாதை நன்மை நிறைந்ததாக இருந்து வந்தாலும், மனித சக்திகளால் மேற்கொள்ளமுடியாத யோர்தான் நதி போன்ற சோதனைகளையும், செங்கடல் போன்ற உபாதைகளையும் கடந்து வர தேவன் உதவினார்.

உங்கள் வாழ்க்கையிலும் அப்படித்தானே! பயப்படாதிருங்கள். தேவன் உங்கள் பட்சமாக நின்று உங்களுக்காக யுத்தம் செய்கிறார். அப்படியே தொடர்ந்தும் செய்வார். **நீங்கள் காற்றையும் காண மாட்டீர்கள். மழையையும் காணமாட்டீர்கள்; ஆனாலும் நீங்களும் உங்கள் ஆடுமாடுகளும் உங்கள் மிருகஜீவன்களும் குடிக்கும்படிக்கு, இந்த பள்ளத்தாக்கு தண்ணீரால் நிரப்பப்படும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.** 2 இராஜாக்கள் 3:17

**ஆதலால் கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறதாவது: இதோ, அஸ்திபாரமாக ஒரு கல்லை நான் சீயோனிலே வைக்கிறேன்; அது பரீட்சிக்கப்பட்டதும், விலையேறப்பெற்றதும், திட அஸ்திபாரமுள்ளதுமான மூலைக்கல்லாயிருக்கும், விசுவாசிக்கிறவன் பதறான்.** ஏசாயா 28:16. நீங்களும் பதற்றமடையாதிருங்கள். ஆண்டவர் இயேசு கட்டாயம் உங்களுக்கும் அற்புதம் செய்வார். மலைகள் விலகலாம், பர்வதங்கள் நிலைபெயர்ந்து நடுச்சமுத்திரத்தில் தள்ளுண்டு போகலாம். ஆனால் தேவகிருபை உங்களை விட்டு விலகாது. **மலைகள் விலகினாலும், பர்வதங்கள் நிலைபெயர்ந்தாலும், என் கிருபை உன்னைவிட்டு விலகாமலும், என் சமாதானத்தின் உடன்படிக்கை நிலைபெயராமலும் இருக்கும் என்று, உன்மேல் மனதுருகுகிற கர்த்தர் சொல்லுகிறார்.** ஏசாயா 54:10. வழுவாதபடி உங்களைக் காக்கும் ஓர் வல்லதேவன் உங்களுக்கு உங்கள் பக்கமாக இருக்கிறார். தைரியமாயிருங்கள். இந்த ஆண்டு முடிவதற்குள் உங்களுக்கு வரவேண்டிய அனைத்து நன்மைகளும் உங்களுக்கு வந்துசேரும்.

எங்களைப் பொறுத்தமட்டில், ஊழியபாதை மிகவும் கடினம். சத்துருவை எதிர்த்துப் போராடிப் போராடியே எங்கள் பெலன் குன்றிப்போகிறது. ஆனால் தேவன் எங்களைத் தூக்கி நிறுத்துகிறார். **நீதிமான் ஏழுதரம் விழுந்தாலும் திரும்பவும் எழுந்திருப்பான்; துன்மார்க்கரோ தீங்கிலே இடறுண்டு கிடப்பார்கள்.** நீதிமொழிகள் 24:16. நாங்கள் சோர்ந்து போவதில்லை. தேவபெலன் எங்களைத் தாங்குகிறது.

நமது ஊழியங்கள் மேல் சற்று கருத்தாயிருங்கள். கூடுமானவரையில் உங்கள் ஊக்கமான ஜெபங்களாலும், உதாரத்துவமான காணிக்கைகளாலும் **அழைப்பின் எதிரொலி ஊழியங்களையும்** தாங்குங்கள். உங்கள் சபைகளையும், இதர தேவ ஊழியங்களையும், ஊழியர்களையும்கூடத் தாங்குங்கள். தேவன் உங்களை பலமடங்கு ஆசீர்வதிப்பார்! ஆமென்!

**உங்களுக்கு எங்கள் புத்தாண்டு வாழ்த்துக்கள்.**

கிறிஸ்து இயேசுவுக்குள் உங்கள் ஊழியர்கள்,

**போதகர் அலக்ஸ் சாம்சன் சாம்**
**போதகர் எஸ். சாம் செல்வ ராஜ்.**

(+91) 98410 71858 / 98412 71858, மின்னஞ்சல் : sam@echoofhiscall.org

Our Ministries: ECHO OF HIS CALL Monthly Magazines (16 languages) BIBLECOR - Postal Courses (3 languages) YouTube Ministry Online Courses Theological Correspondence Courses (2 languages) Church Planting Nehemiah Bible Colleges Gospel Printing Press Great Commission Partners St. Paul's Matriculation School Crusades Community Development

## உங்கள் கவனத்திற்கு!

*நமது அழைப்பின் எதிரொலி ஊழியத்தின் 5 நிமிட தேவ செய்திகளும், ஜெபங்களும் தினமும் காலை 2.00 மணி முதல் தமிழ், தெலுங்கு, இந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் Echo of His Call YouTube சானலில் ஒளிபரப்பாகிக் கொண்டிருக்கின்றன. இதைப் பார்ப்பதன் மூலம் கர்த்தரின் கிருபையைப் பெறலாம்.*

*மேலும், (+91) 98410 71858 மற்றும் (+91) 98412 71858 ஆகிய என்னுடைய தனிப்பட்ட (Personal) இரு செல்போன் எண்களையும் தங்கள் செல்போன்களில் பதிவு செய்து கொள்ளுங்கள்.*

**– போதகர் எஸ். சாம் செல்வ ராஜ்**

... 1–ம் பக்கத் தொடர்ச்சி

யற்ற சூழ்நிலைகளில், அதிக ஊக்கத்துடனும், உறுதியுடனும் நாம் ஜெபிக்க வேண்டும். தனிப்பட்ட நபர்கள் பலர், தங்கள் இக்கட்டான நேரங்களில், தேவனை நோக்கிப் பார்த்து, நினைவுகூரப்பட்டு அவரிடமிருந்து பதிலை பெற்றுக் கொண்டதை வேதாகமம் நெடுகவே நாம் காண்கிறோம்.

'தேவனால் நினைவுகூரப்பட்டு' என்று சொல்லும்போது தேவன் மறந்துவிட்டார் என்பதல்ல; மாறாக நாம் விசுவாசத்துடன் விடாப்பிடியாக ஜெபிக்கும் போது, நமது கூக்குரலுக்கும் பதிலளிக்கப் பரலோகம் அசைகிறது. ஆமென்.

பிள்ளைபெற இயலாமையால் மிகவும் துயரமடைந்திருந்த அன்னாளின் கதையைப் பாருங்கள்; அவள் தனது துயரத்தில், ... **'நான் மனக்கிலேசமுள்ள ஸ்திரீ'** ... 1 சாமுவேல் 1:15 என்று புலம்பினாள்; ஆனால் தன் இருதயத்தை ஜெபத்தில் ஊற்றியபின்பு, அவளது முகநாடி மாறுபட்டது. ... **அப்புறம் அவள் துக்கமுகமாயிருக்கவில்லை.** 1 சாமுவேல் 1:18. ஏனெனில் தேவன் தனது ஜெபத்திற்குப் பதில் அளிப்பார் என அவள் விசுவாசித்தாள். அப்படியே ... **கர்த்தர் அவளை நினைந்தருளினார்.** 1 சாமுவேல் 1:19. அவள் பிள்ளை பேற்றால் ஆசீர்வதிக்கப்பட்டாள்.



'நான் மனக்கிலேசமுள்ள ஸ்திரீ'
... அன்னாளின் ஜெபம்

எசேக்கியா மற்றொரு வலிமையான எடுத்துக்காட்டு: தனது மரணத்திற்கு ஆயத்தமாக தேவன் அவனிடம் சொன்னபோது, எசேக்கியா ஊக்கமாக ஜெபித்தான். **'ஆ கர்த்தாவே, நான் உமக்கு முன்பாக உண்மையும் மனஉத்தமுமாய் நடந்து, உமது பார்வைக்கு நலமானதைச் செய்தேன் என்பதை நினைத்தருளும்.'** ... 2 இராஜாக்கள் 20:3. அவனது மனமார்ந்த ஜெபம் தேவனுடைய இருதயத்தை அசைத்தது; அவனது வாழ்நாட்கள் நீடிக்கப்பட்டது.

இதுபோன்ற ஊக்கமான ஜெபங்கள் எப்படி தேவனுடைய உள்ளத்தை அசைத்தது என்றும், அவை எப்படி தேவனது தலையீட்டைத் தூண்டியது என்றும் பல சாட்சிகள் வேதாகமம் நெடுகவே காணப்படுகின்றன. ஜனங்கள் ஜெபித்த ஒவ்வொரு முறையும், தேவன் அவர்களை நினைவுகூர்ந்தார்.

'தேவனே உமது கிருபையால் என்னை நினைத்தருளும்', 'என்மேல் இரக்கமாயிரும்', 'என்னைக் கண்ணோக்கிப் பாரும்', 'எனது சூழ்நிலையைக் கவனியும்' என்றெல்லாம் கடந்த காலங்களில் உங்களில் எத்தனைபேர் தேவனிடம் கதறினீர்களோ? நான் அறியேன். என்னிடம் உங்களுக்கு ஒரு நற்செய்தி உண்டு; ... **'என் வார்த்தைகளில் ஒன்றாகிலும் இனித் தாமதிப்பதில்லை' யென்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார்; 'நான் சொன்ன வார்த்தை நிறைவேறும்' என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார்**... எசேக்கியேல் 12:28.

2025–ஆம் ஆண்டு தேவன் உங்களை நினைவுகூர்ந்து, தமது திட்டங்களை உங்களது வாழ்விலும், குடும்பத்திலும், ஊழியத்திலும் நிறைவேற்றுவார் என்பது எனது உளமார்ந்த வேண்டுதலாயிருக்கிறது.

தேவன் நம்மை நினைவுகூர வேண்டும் என்று நாம் விரும்புவது போலவே, வருடத் துவக்கத்திலேயே நாமும் சிலவற்றை நினைவுகூரவேண்டும் என்று தேவன் விரும்புகிறார். நாம் பின்பற்ற வேண்டிய சில முக்கியமான கோட்பாடுகளை தேவன் நமக்கு நினைப்பூட்டுகிறார்.

### 1. கர்த்தருடைய செயல்களையும் அதிசயங்களையும் நினைவு கூருங்கள்!

**கர்த்தருடைய செயல்களை நினைவு கூருவேன், உம்முடைய பூர்வ காலத்து அதிசயங்களையே நினைவுகூருவேன்; உம்முடைய கிரியைகளையெல்லாம் தியானித்து, உம்முடைய செயல்களை யோசிப்பேன்**... சங்கீதம் 77:11–12.

நம்முடைய வாழ்வில் தேவன் செய்த அற்புதங்களையெல்லாம் நினைவுகூர வேதம் நமக்குப் போதிக்கிறது. யோசுவா 4–ம் அதிகாரத்தில் ஒரு தெளிவான உதாரணம் உண்டு. யோசுவாவின் தலைமையில் இஸ்ரவேலர் யோர்தான் நதியைக் கடந்தனர்; அச்சமயம் அவர்கள் தேவனது வல்லமையான கிரியைகளை நினைவுகூர குறிப்பிட்ட காரியம் ஒன்றைச் செய்யும்படி தேவன் அவர்களுக்குக் கட்டளையிட்டார்.

## வருமான வரி விலக்கு

இந்திய வருமான வரிச்சட்டம் பிரிவு 80G–கீழ் ஏழை, எளியோருக்கு மருத்துவம் மற்றும் சமுதாய முன்னேற்றத்திற்கான உதவி செய்வதற்காக "அழைப்பின் எதிரொலி" அறக்கட்டளைக்குத் தனிநபர் மற்றும் ஸ்தாபனங்கள் தரும் நன்கொடைகள் வருமான வரிச்சட்டப் பிரிவு 80G–யின் கீழ் வரிவிலக்குப் பெறத் தகுதியுடையவை. வருமான வரிக் கணக்குகளுக்கான அலுவலக இரசீது நம் அலுவலகத்திலிருந்து வழங்கப்படும். அப்படிப்பட்ட நன்கொடைகளுக்கான பணவிடைத்தாள்களை (Demand Drafts) "Echo of His Call Educational Trust" என்ற பெயருக்கு எடுத்து அனுப்பும்போது **ஆதார் மற்றும் பான் (PAN) நம்பர்களை தெரியப்படுத்தி வருமானவரி விலக்கு பெறுங்கள்.** மேலும் விபரம் வேண்டுவோர் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

| | |
|---|---|
| **Account Name** | **: ECHO OF HIS CALL EDUCATIONAL TRUST** |
| **Account Number** | **: 1023 2923 805** |
| **Bank Name** | **: STATE BANK OF INDIA** |
| **Branch** | **: TRIPLICANE, CHENNAI - 600 005** |
| **IFSC Code** | **: SBIN 0000249** |
| **SWIFT Code** | **: SBI NIN BB 455** |



யோசுவாவின் தலைமையில் இஸ்ரவேலர் யோர்தான் நதியைக் கடத்தல்!

ஒவ்வொரு கோத்திரத்தாரும் நதிக்கரையிலிருந்து ஒவ்வொரு கற்களை எடுத்து தேவனுடைய உண்மைக்கு நினைவு கூருவதாக வைக்க அவர்களுக்குக் கட்டளையிட்டார்.

சென்ற 2024–ம் ஆண்டிலிருந்தோ அல்லது அதற்கு முந்தைய ஆண்டுகளிலிருந்தோ உங்கள் நினைவுக்கு வருவது யாது? யோர்தானைக் கடக்கும் சவாலை இஸ்ரவேலர் சந்தித்திராவிட்டால், பின்வரும் சந்ததிக்குச் சொல்ல அவர்களுக்கு நினைவுக் கற்கள் இருந்திருக்காது.

அதுபோலவே கர்த்தர் சிலவேளைகளில் நம்மையும் சீறிப்பாயும் யோர்தான் போன்ற சவால்களுக்குள் செல்ல அனுமதிக்கிறார்; இவை நமது விசுவாசத்தைக் காட்ட மட்டுமல்ல, தேவன் நமக்கும் நமது சந்ததிக்கும் என்ன செய்ய இயலும் என்பதன் சாட்சியுமாகும்.

## 2. உன் சிருஷ்டிகரை நினை! - பிரசங்கி 12:1

**... உன் வாலிபப்பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை ...** பிரசங்கி 12:1. இவ்வசனம் வாலிபருக்கு மட்டும் எழுதப்பட்டதாகவே நாம் காண்கிறோம். அதையும் தாண்டி, நமது நித்திய வாழ்நாள் முழுவதுமே நமது சிருஷ்டிகரை நினைவு கூர அழைக்கப்படுகிறோம்.

வேதம் எச்சரிப்பதுபோல, சிருஷ்டிகரை விட சிருஷ்டிக்கப்பட்டவைகளையே நாம் முக்கியப்படுத்தி விடுகிறோம். **தேவனுடைய சத்தியத்தை அவர்கள் பொய்யாக மாற்றி, சிருஷ்டிகரைத் தொழுது சேவியாமல் சிருஷ்டியைத் தொழுது சேவித்தார்கள், அவரே என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்பட்டவர். ஆமென்.** ரோமர் 1:25.

இதைப் புரிந்து கொள்ளாமல் நாம் உருவாக்கியவரை விட்டு விட்டு, உருவாக்கப்பட்டவைகளுக்கு முக்கியம் அளித்து விடுகிறோம். ஆகையால்தான் **முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்.** மத்தேயு 6:33 என்று வேதம் நமக்கு நினைவூட்டுகிறது.

நமது விசுவாசத்தைத் துவக்குகிறவரும், முடிக்கிறவரும் தேவனே என்னும் அடிப்படையை நாம் மறந்து விடுகிறோம். அவரே எல்லாவற்றையும் சிருஷ்டித்தவரும், நமது வாழ்க்கையை முற்றிலும் கட்டுப்படுத்துகிறவருமாக அவர் காணப்படுகிறார். நமக்குச் சம்பவிக்கும் ஒவ்வொரு நிகழ்வும் தேவ நோக்கத்தைக் கொண்டவையாகக் காணப்பட்டு, சகலமும் நன்மைக்கேதுவாகவே நடைபெறுகிறது. ஆகையால் சிருஷ்டிகரை நம்புங்கள்.

யாக்கோபின் முதிர்வயதில் பிறந்த யோசேப்பு, தன் தகப்பனுக்குப் பிரியமானவனாயிருந்தான். அவனுடைய சகோதரர்களும் அவன்மீது பொறாமை கொண்டனர். சொப்பனக்காரனாயிருந்த யோசேப்புக்கு, தன்னுடைய குடும்பத்தினர் அனைவரும் ஒருநாள் தன்னைத் தொழுது கொள்வார்கள் என்று தேவனிடமிருந்து தீர்க்கதரிசனத்தைப் பெற்றுக் கொண்டான். அவனது எதிர்காலத்தை அறிந்திருந்த தேவன், அவனிருந்த இடத்தில் இந்த தரிசனத்தை நிறை



யாக்கோபு தன் பிரியமான மகனுடன்!

வேற்ற இயலவில்லை; இதற்காகப் பயணம் ஒன்று தேவைப்பட்டது.

தனது மகனைப் பாதுகாப்பதற்காக, யாக்கோபும் அவனை எகிப்து வரை செல்ல அனுமதித்திருக்க மாட்டார். அங்குதான் கர்த்தரின் தேவதிட்டம் யோசேப்பின் வாழ்க்கையில் நிறைவேறக் காத்திருந்தது. ஆகவே, யோசேப்பு குழி, சிறைச்சாலை என்ற வேதனையான அனுபவங்களின் வழியாகச்



யோசேப்பின் வேதனையான அனுபவங்கள்!

தொடர்ச்சி 6–ம் பக்கம்.....

நெகேமியா வேதாகமக் கல்லூரிகள்
கல்வித்தகுதி : 10–ம் வகுப்பு மற்றும் அதற்கு மேல்
சேப்பாக்கம் & சந்தோஷபுரம், வேளச்சேரி – சென்னை
Diploma in Theology
போதனா மொழி : தமிழ் (பகுதி நேரம்) மாலை நேர வகுப்பு
போதனா மொழி : இந்தி (முழு நேரம் (Residential)) (தங்கிப் படிப்பவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்படும்.)
உடனே அணுகவும்!
உலகத்தின் தலைசிறந்த கிறிஸ்தவ தலைவர்கள் மற்றும் போதகர்களின் நன்மதிப்பைப் பெற்ற 55 வருட அனுபவ ஸ்தாபனம்.
தொடர்புக்கு : தலைவர், நெகேமியா வேதாகமக் கல்லூரி,
10, முகமது அப்துல்லா 2–வது தெரு, பெல்ஸ் ரோடு, சேப்பாக்கம், சென்னை – 600 005.
தொலைபேசி: (+91–44) 2852 8282, கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்னஞ்சல் : sam@echoofhiscall.org /இணையதளம் : www.echoofhiscall.org

# பிரதானக் கட்டளைப் பங்காளர்

GREAT COMMISSION PARTNERS - PRAISE & PRAYER POINTS

**பகிர்தல்** (Share) (கலாத்தியர் 6:2), **உதவி செய்தல்** (Support) (ரோமர் 12:13) மற்றும் **துரிதப்படுத்துதல்** (Speed up) (II தீமோத்தேயு 1:6)

**துதி மற்றும் ஜெப குறிப்புகள் - 2025 ஜனவரி 19 முதல் பிப்ரவரி 18 வரை**

**(இப்பகுதியைப் பிரித்தெடுத்து, மடித்து, உங்கள் வேதாகமத்தினுள் வைத்து தொடர்ந்து ஜெபியுங்கள்)**

## தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்

ஜனவரி 19 ⇨ நமது **அழைப்பின் எதிரொலி** இணை ஆசிரியர்களையும், குடும்ப அங்கத்தினர் களையும் ஆசீர்வதித்து வருகிறதற்காகவும்...

ஜனவரி 20 ⇨ நமது ஜெபப்பங்காளர்கள், சந்தாதாரப் பங்காளர்கள், விசுவாசப் பங்காளர்கள், ஆயுள் பங்காளர்கள் மற்றும் பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் அனைவரையும், அவர்களது குடும்பத்தாரையும் கர்த்தர் ஆசீர்வதித்து வருவதற்காக...

ஜனவரி 21 ⇨ கடந்த மாதத்தின் பொருளாதார மற்றும் ஆவிக் குரிய தேவைகளை சந்தித்த கிருபைக்காக...

ஜனவரி 22 ⇨ நமது தலைமைச் சபை, கிளைச் சபைகள் மற்றும் அதன் விசுவாசிகளையும், ஊழியர்களையும் ஆசீர்வதித்து வருவதற்காக...

ஜனவரி 23 ⇨ வேதாகம கருத்தரங்குகளை தொடர்ந்து நடத்தி வருவதற்காக...

ஜனவரி 24 ⇨ தலைமைச் சபை மற்றும் கிளைச் சபைகளில் இவ்வருட அனைத்து கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு கொண்டாட்டங்கள் சிறப்பான முறையில் நடைபெற்றமைக்காக ...

ஜனவரி 25 ⇨ நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி, நெகேமியா வேதாகமக் கல்லூரிகள்** மற்றும் **அஞ்சல்வழி வேதாகமக் கல்விகள்** ஆகியவற்றின் செயல்பாடுகளை ஆசீர்வதித்து வருகிறதற்காக...

ஜனவரி 26 ⇨ நமது தலைமைப் போதகரை முழு அர்ப்பணிப்புடன், பன்மொழி ஊழியங்களின் மூலமாக சுவிசேஷத்தினை பிரசங்கித்திட கிருபை பாராட்டி வருகிறதற்காக...

ஜனவரி 27 ⇨ சந்திக்கப்படாத மக்களை சென்றடையும் **அழைப்பின் எதிரொலி** யூடியூப்பின் 5 நிமிட செய்திகளை ஆசீர்வதித்து வருகிறதற்காக...

ஜனவரி 28 ⇨ நமது அச்சகத்திலேயே 16 மொழிகளில் அச்சடிக்கப்பட்டு எல்லா மிஷன் பணித்தளங்களுக்கும் அனுப்பப்படும் சுவிசேஷப் பிரசுரங்களை தேவன் ஆசீர்வதித்து வருவதற்காக...

ஜனவரி 29 ⇨ நமது **அழைப்பின் எதிரொலி** பணியாளர்கள் மற்றும் அவர்கள் குடும்பத்தினர்கள் நல்ல உடல்நலத்துடனும் தேவபாதுகாப்புடனும் இருப்பதற்காக ...

ஜனவரி 30 ⇨ நமது ஒருங்கிணைப்பாளர்களையும், பணித்தள விசுவாசிகளையும் மற்றும் அவர்களது குடும்பத்தினர்களையும் கர்த்தர் ஆசீர்வதித்து வருகிறதற்காக ...

ஜனவரி 31 ⇨ நமது தலைமை மற்றும் கிளைச்சபைகளின் போதகர்கள் மற்றும் மூத்த உறுப்பினர்களை ஆசீர்வதித்து வருகிறதற்காக...

பிப்ரவரி 01 ⇨ நமது மருத்துவ ஊழியத்தில் கர்த்தர் நடத்தி வரும் அற்புதங்களுக்காக...

பிப்ரவரி 02 ⇨ நமது தலைமைச் சபையில் நடைபெறும் ஆண்கள் ஊழியத்தை கர்த்தர் ஆசீர்வதித்து வருவதற்காக ...

பிப்ரவரி 03 ⇨ நமது **சர்வதேச வாலிபர் மற்றும் சிறுவர் நல தரிசன ஊழியத்தை** ஆசீர்வதித்து வருகிறதற்காக...

## தேவனிடத்தில் ஜெபியுங்கள்

பிப்ரவரி 04 ⇨ புதிய தொற்று நோய்கள் உலகத்தை விட்டு ஒழிய...

பிப்ரவரி 05 ⇨ **அழைப்பின் எதிரொலியின்** வாலிப மற்றும் கள ஊழியங்களுக்காக...

பிப்ரவரி 06 ⇨ இந்த வருடத்தின் **அழைப்பின் எதிரொலி ஊழியத்தின்** அனைத்துத் தேவைகளையும் கர்த்தர் சந்திக்க...

பிப்ரவரி 07 ⇨ உலக பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பிற்காக...

பிப்ரவரி 08 ⇨ கிறிஸ்தவ ஊழியர்கள் மற்றும் மிஷனரிகள் மீதான வன்முறைகள் நிறுத்தப்பட வேண்டி ...

பிப்ரவரி 09 ⇨ நமது தலைமைப் போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களையும், அவர்களது குடும்பத்தினரையும் அனைத்து தீய சக்திகளிடமிருந்து பாதுகாக்கப்பட வேண்டி...

பிப்ரவரி 10 ⇨ இஸ்ரேல், பாலஸ்தீனம், ரஷ்யா மற்றும் உக்ரைன் நாடுகளில் சமாதானம் பரவ ...

பிப்ரவரி 11 ⇨ அரசு பொதுத்தேர்வுக்கு தயாராகும் நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி** மாணவர்கள் நல்ல மதிப்பெண்களுடன் தேர்ச்சியடைய...

பிப்ரவரி 12 ⇨ நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி** மற்றும் **நெகேமியா வேதாகமக் கல்லூரி** மாணவர்களின் பாதுகாப்பிற்காக ...

பிப்ரவரி 13 ⇨ நமது ஸ்தாபன ஊழியர்களும் மற்றும் அச்சகப் பணியாளர்களும் சுகபத்திரமாக பாதுகாக்கப்பட...

பிப்ரவரி 14 ⇨ நமது அனைத்து **அழைப்பின் எதிரொலி** இணை ஆசிரியர்களுக்காகவும், அவர்களின் குடும்ப அங்கத்தினர்களுக்காகவும் ...

பிப்ரவரி 15 ⇨ ஆண்டவரது இராஜ்யம் பூமியில் நிலைப்பட மேலும் கூடுதலான தரிசனங்களை நம்மிடத்தில் அருளவேண்டி...

பிப்ரவரி 16 ⇨ நோய், வறுமை மற்றும் பட்டினியால் பாதிக்கப்பட்ட மக்கள் அதிலிருந்து மீண்டு வர...

பிப்ரவரி 17 ⇨ மது அருந்தும் பழக்கம் உடையோர் மற்றும் தீயப் பழக்கம் கொண்டோர் மனந்திரும்ப ...

பிப்ரவரி 18 ⇨ உலகமெங்கிலும் சமாதானம் நிலவிட...

... 4-ம் பக்கத் தொடர்ச்சி

சென்று இறுதியில் சிங்காசனத்தை அடைய வேண்டியதாயிற்று. பொய்யான குற்றச்சாட்டு, சிறைச்சாலை போன்ற பரீட்சைகள் காணப்பட்டாலும், எல்லாச் சூழ்நிலைகளிலும் தேவன் தமது ஆளுகையைக் கொண்டிருந்தார்.

நண்பர்களே! யோசேப்பைப் போலவே, வாழ்க்கை உங்களுக்கு நியாயமற்றதாக இருந்திருக்கலாம்; வேதனையான அனுபவங்கள், அநீதிகள், துரோகங்கள் இழைக்கப்பட்டு, அவமானங்கள் நேர்ந்திருக்கலாம். ஆனால், கர்த்தர் எல்லாவற்றையும் தமது கட்டுப்பாட்டில் கொண்டுள்ளார் என்று நினைவு கூருங்கள்.

"நீ வாழ்வடைந்திருக்கும்போது என்னை நினைத்துக் கொள்" என்று சுயம்பாகிகளின் தலைவனிடம் யோசேப்பு கூறினான்; ஆனால் அவன் மறந்து போனான். ஆனால் மனிதனல்ல தேவனே யோசேப்பின் உயர்வைத் திட்டமிட்டார். தேவன் அடைத்த கதவைத் திறக்கவோ அல்லது திறந்ததை அடைக்கவோ எந்த மனிதனுக்கும் அதிகாரமில்லை. தேவனுடைய ஏற்ற வேளைக்காகக் காத்திருங்கள்; **அவர் எல்லாவற்றையும் அதினதின் காலத்தில் நேர்த்தியாய் செய்கிறார்** (பிரசங்கி 3:11).

எந்தச் சூழ்நிலையிலும் உங்கள் சிருஷ்டிகரை நினைத்துக் கொள்ளுங்கள். அவர் உங்கள் தலையை உயர்த்துகிறவரும், அவருடைய திட்டங்களை நிறைவேற்றுகிறவருமாயிருக்கிறார். அவரை முற்றிலும், நம்புங்கள். உங்கள் எதிர்காலத்தை அவர் வடிவமைக்கிறார்.

**"நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கு நான் உங்கள்பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன்" என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவைகள் தீமைக்கல்ல, சமாதானத்துக்கேதுவான நினைவுகளே.** எரேமியா 29:11.

தனது சகோதரர்களால் கைவிடப்பட்ட யோசேப்பு, அந்தக் குழியில் நம்பிக்கையற்றவனாய் காணப்பட்டிருக்க வேண்டும். 'எனக்கு ஒரு எதிர்காலமில்லையே' என்று எண்ணியிருக்க வேண்டும். போத்திபாரின் வீட்டில் பொய்க்குற்றம் சுமத்தப்பட்டவனாய், சிறைச்சாலையில் அவனது விரக்தியை நினைத்துப் பாருங்கள். காப்பாற்றப்படுதல் என்பது சாத்தியமற்றதாய்க் காணப்பட்டது. போத்திபார் போன்ற அதிகாரம் படைத்த மனிதனை எதிர்த்து நிற்க யாரால் இயலும்?

ஆனால் யோசேப்பின் சோதனைகளின் மத்தியிலும் தேவன் செயல்பட்டுக் கொண்டிருந்தார். எதிர்பாராத சூழ்நிலைகளால் பார்வோன் யோசேப்பின் தலையை உயர்த்தி வைத்தான். ஓர் இரவில் இது நடைபெறவில்லை. இவையெல்லாவற்றிலும் யோசேப்பு கர்த்தரை முழுமையாய் நம்பக் கற்றிருந்தான்.

இன்றும் மாறாத தேவன், உங்களை உயர்த்தவும், உங்களுக்குத் திரும்பவும் நம்பிக்கையூட்டவும் சரியான மக்களை இந்த ஆண்டு உங்களது வாழ்க்கையில் கொண்டு வருவார். உங்கள் மகிமையும், தலையை உயர்த்துகிறவரும் அவரே என்பதை நினைவில் கொள்ளுங்கள். உங்களது சூழ்நிலை படுமோசமாக இருந்தாலும், பாதை மிகக் கடினமாக இருந்தாலும் உங்கள் சிருஷ்டிகராகிய தேவனை நம்புங்கள். நீங்கள் வேண்டிக் கொள்வதற்கும், நினைப்பதற்கும் மேலாக அவர் செய்ய வல்லவர்.


## 3. உங்கள் தேவைகளைக் கொடுப்பவரை நினையுங்கள்!

**என் சாமர்த்தியமும் என் கைப்பெலனும் இந்த ஐசுவரியத்தை எனக்குச் சம்பாதித்தது என்று நீ உன் இருதயத்தில் சொல்லிக்கொள்ளாமலும் இருக்க எச்சரிக்கையாயிருந்து, உன் தேவனாகிய கர்த்தரை நினைப்பாயாக; அவரே ... ஐசுவரியத்தைச் சம்பாதிக்கிறதற்கான பெலனை உனக்குக் கொடுக்கிறவர்.** உபாகமம் 8:17,18.

உபாகமம் 8–ம் அதிகாரம் எனக்குப் பிடித்த வேதப்பகுதிகளுள் ஒன்றாகும்; நமக்கு இருக்கிற பெலன், அதிகாரம், ஞானம் அனைத்தும் தேவனிடமிருந்து நமக்கு வருகிறது என்று இந்த அதிகாரம் கூறுகிறது. நம்முடைய திறமைகளைக் குறித்தும், நமக்கு எல்லாவற்றையும் அருளுகிற தேவனையும் மறக்காமலிருக்க நம்மை எச்சரிக்கிறது.

'உன் இருதயத்தில் சொல்லிக் கொள்ளாமலும்' என்று நமது உள்ளான எண்ணங்களைக் குறித்தும் மேற்குறிப்பிட்ட வசனங்கள் கூறுகின்றன. எனவே இந்த எச்சரிப்பு வெறும் வார்த்தைகளையும் தாண்டி நமது உள்ளத்தின் நினைவுகளுக்கும் செல்லுகிறது.

இப்புதிய வருடத்திற்குள் நுழையும் உங்களுக்கு, எல்லா சூழ்நிலைகளிலும் தேவனே உங்கள் தேவைகளையெல்லாம் நிறைவாக்குகிறவராக இருக்க வேண்டும் என்பது உங்கள் ஜெபமாக இருக்கட்டும்.



ஐந்து அப்பங்கள், இரு மீன்கள் – போதுமான உணவு!

ஐந்து அப்பங்களையும், இரு மீன்களையும் கொண்டு 5000 பேரைப் போஷித்த கர்த்தர் உங்கள் குறைவுகளையெல்லாம் நிறைவாக்குவராக!

ஒருவேளை உங்கள் குடும்பத் தேவைகளை எப்படிச் சந்திப்பது போன்ற சவாலுடன் இவ்வருடத்தைத் துவக்கும் உங்களுக்கு தேவன் போதுமானவராக இருப்பாராக! **'பயப்படாதே, திகையாதே! நானே உன் குறைவுகளை நிறைவாக்குகிறவர். கொஞ்சமான எண்ணெயையும் கொண்டு, விதவையையும், அவளது மகனையும் போஷித்தவர் உனது குறைவுகளையும் நிறைவாக்க வல்லவர்' என்ற தேவனுடைய உறுதியான வார்த்தைகள் உங்கள் மனதில் ஒலிக்கட்டும்.**

## 4. ஓய்வு நாளை நினைவு கூருங்கள்!

ஓய்வு நாள் என்றாலே ஒரு குழப்பம் தான். சனிக்கிழமைதான் ஓய்வுநாள் என்று நினைத்தால், புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவர்கள், இயேசு உயிர்த்தெழுந்த நாளான



**புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவர்களின் ஞாயிற்றுக்கிழமை ஆராதனை செல்லுதல் – பாரம்பரியமாக அனுசரிப்பு!**

தொடர்ச்சி 8-ம் பக்கம்.....

## நமது தலைமையக ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்!

| | |
|---|---|
| 1. ஜெப உதவி | – 24 மணி நேரம் |
| 2. அழைப்பின் எதிரொலி | – பத்திரிகைகள் (16 மொழிகள்) |
| தமிழ், ஆங்கிலம், மலையாளம், தெலுங்கு, இந்தி, கன்னடம், மராத்தி, பெங்காளி, குஜராத்தி, ஒடியா, நேப்பாளி, அஸாமி, பஞ்சாபி, உருது, சிங்களம், ஆப்ரிகான்ஸ். | |
| 3. வேதாகமக் கடித முறைக் கல்வி | – தமிழ், ஆங்கிலம், இந்தி |
| 4. அஞ்சல் வழி இறையியல் கல்வி (தமிழ் மற்றும் ஆங்கிலம்) | |
| 5. நெகேமியா வேதாகமக் கல்லூரிகள் | – (சேப்பாக்கம், வேளச்சேரி & சந்தோஷபுரம்) |
| 6. பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் (ஊழியர் ஐக்கியம்) | |
| 7. பயிற்சி வகுப்புகள் – கருத்தரங்குகள் | |
| 8. சுவிசேஷக் கூட்டங்கள் | |
| 9. கைப்பிரதி வினியோகம் | – தொடர் ஊழியம் |
| 10. சுவிசேஷ அச்சகம் | – சுவிசேஷ பிரசுரங்கள் |
| 11. St. பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி | – கிராம ஆங்கிலப் பள்ளி |
| 12. சிறுவர் வேத பாடசாலை (சேப்பாக்கம்) | – ஞாயிறு காலை 10.30 மணி |
| & (வேளச்சேரி, பாலாஜி நகர் & சந்தோஷபுரம்) | மாலை 3.00 மணி |
| 13. அதிகாலை ஆராதனை | – ஞாயிறு காலை 5.30 மணி |
| 14. ஆயத்தக் கூட்டம் | – ஞாயிறு காலை 8.00 மணி |
| 15. தமிழ் ஆரதனைகள் | – ஞாயிறு காலை 8.30 மணி |
| 16. வாலிபர் கூட்டம் | – ஞாயிறு காலை 11.00 மணி |
| 17. ஐக்கிய உணவு | – ஞாயிறு மதியம் 1.00 மணி |
| 18. இந்தி ஆராதனை | – ஞாயிறு மாலை 4.00 மணி |
| 19. தெலுங்கு ஆராதனை | – ஞாயிறு மாலை 5.00 மணி |
| 20. ஆங்கிலம் – இந்தி ஆராதனை | – ஞாயிறு மாலை 6.00 மணி |
| 21. கருத்து நேரம் | – ஞாயிறு இரவு 7.00 மணி |
| 22. பெண்கள் ஆராதனை | – புதன் மாலை 5.30 மணி |
| 23. ஆண்கள் ஆராதனை | – வெள்ளி இரவு 7.00 மணி |
| 24. சீஷத்துவக் கூட்டம் | – சனி மாலை 6.00 மணி |
| 25. வீட்டுக் கூட்டங்கள் | – செவ்வாய், வியாழன் மாலை 6.30 மணி |
| 26. விசேஷ திருவிருந்து | – பிரதி மாதம் முதல் நாள் காலை 6.00 மணி |
| 27. ஊழியர்கள் கூடுகை | – முதல் சனிக்கிழமை மாலை 6.00 மணி |
| 28. பெற்றோர் ஜெபம் | – முதல் ஞாயிறு மாலை 4.00 மணி |
| 29. இரவு ஜெபம் | – 3–ம் வெள்ளி இரவு 9.30 மணி |
| 30. உபவாச ஜெபம் | – இரண்டாம் சனிக்கிழமை காலை 9.30 மணி |
| 31. திருவிருந்து | – 2–ம் ஞாயிறு ஆராதனைகள் |
| 32. வாலிபர் / சிறுவருக்கான ஜெபம் | – தினமும் இரவு 10.00 மணி (தொலைபேசி மூலம்) |
| 33. பணியாளர் ஜெபம் | – தினமும் காலை 9.00 மணி |
| 34. அலுவலகம் | – தினமும் காலை 9.00 முதல் இரவு 9.00 வரை (ஞாயிறு தவிர) |

# அழைப்பின் எதிரொலி
## தபால் வழிக் கல்வி
### இந்திய மாணாக்கர்களுக்கு

## I. வேதாகமத் தபால் கல்வி

தபால் மூலம் வேதத்தின் உண்மைகளையும், தமிழ், ஆங்கிலம், இந்தி மொழிகளில் கற்க ஓர் அரிய வாய்ப்பு. வயது வரம்பு இல்லை. கல்வித் தகுதி தேவையில்லை. கட்டாயக் கட்டணம் எதுவும் இல்லை.



"புதுவாழ்வு – உமக்கு" என்ற நல்ல புத்தகத்தையும் பெற்றுக் கொள்ளலாம். இப்புத்தகம் ஆங்கிலம் – 54 பக்கங்கள், இந்தி – 76 பக்கங்கள், தமிழ் – 96 பக்கங்கள் கொண்டது. சான்றிதழ் வழங்கப்படும்.

– ஆசிரியர்

## II. அஞ்சல் வழி இறையியல் கல்வி




ஆழமான ஆவிக்குரிய சத்தியங்களை 149 தொகுப்புகள், ஆங்கிலம் – 537 பக்கங்கள் மற்றும் தமிழ் – 652 பக்கங்கள் கொண்ட 7 புத்தக வடிவில் பெற்று முழுவதும் படித்த பின்னர் ஊழிய சான்றிதழ் பெறமுடியும். இதற்கு மொத்த கட்டணம்

**ரூ.1000/– மட்டுமே.**

மேலும் விவரங்களுக்கு :




**தலைவர், நெகேமியா வேதாகமக் கல்லூரி**
10, முகமது அப்துல்லா 2-வது தெரு, சேப்பாக்கம், சென்னை - 600 005.
தொலைபேசி: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766
கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்அஞ்சல்: biblecor@yahoo.co.in

# அழைப்பின்எதிரொலி
## பத்திரிகையை
### இலவசமாய்ப் பெற்றிட ஓர் நல்ல வாய்ப்பு

உங்கள் / உறவினர் / நண்பர்கள் முகவரி மற்றும் கைபேசி எண்ணை தபால் / கடிதம் / வாட்ஸ் அப் மூலமாக தெளிவாக **அழைப்பின் எதிரொலி** அலுவலகத்திற்கோ, அலுவலக செல்போனுக்கோ அனுப்பினால் உங்களுக்கு / உறவினர்களுக்கு / நண்பர்களுக்கு இலவசமாக **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை அனுப்பி வைக்கப்படும். தேவனுக்கான இச்சேவை முற்றிலும் இலவசமானது! தேவனின் அருளை பெற வாரீர்!!



# குழிக்குழியிலிருந்து அரண்மனைக்கு!

# PIT TO PALACE

(போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின் வாழ்க்கை அனுபவங்கள்)

வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன் (மத்தேயு 24:15)

**... கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையுங் குறைவுபடாது.** – *சங்கீதம் 34: 10.*

1969–ஆம் ஆண்டில் **அழைப்பின் எதிரொலி ஊழியங்கள்** ஆரம்பித்த பொழுது, நமது பல்வேறு விதமான ஊழியங்களுக்காக பணம் தேவைப்பட்டது. பணியாளர்களின் சம்பளம், அச்சடிக்கும் காகிதம், தபால்தலைகள், தொலைபேசிக் கட்டணம், மின் கட்டணம், கட்டிடங்களுக்கான வாடகைகள், போக்குவரத்துச் செலவுகள், ஏழைகளுக்கான உதவிகள் என்று பல காரியங்களுக்குப் பணம் தேவைப்பட்டது.

என் தனி அபிப்பிராயத்தின்படி, எனக்கு கர்த்தராகிய இயேசு கிறிஸ்து போதுமானவர். பணம் எதிர்பார்த்து ஒருவருடைய வீட்டுக் கதவையோ, அலுவலகக் கதவையோ நான் தட்டியதில்லை. பண உதவி வேண்டி என் சபை அங்கத்தினரையோ அல்லது நண்பர்களையோ அணுகியதில்லை. ஆனால் இன்று வரை, என்னை அழைத்த தேவன், எல்லா நேரங்களிலும் என் தேவைகளை, அவரது வழியில் அற்புதமாய் சந்தித்து வருகிறார்.

தேவைகளும், கஷ்டங்களும் வரும் நேரங்களில், அச்சூழ்நிலைகளை, “நான் சகித்துக் கொள்ள வேண்டிய நேரமாகவும்”, “தேவன் என்னை ஜெபிக்கத்தூண்டுகிற நேரமாகவும், ஜெபத்தில் தேவனோடு மேலும் நல்ல உறவை வைத்துக்கொள்ளும் நேரமாகவும்”, நான் எடுத்துக்கொள்வது வழக்கம். அத்தகைய அனுபவங்களுக்குப் பின் மிகப்பெரிய அற்புதங்களை நான் அனுபவித்து மகிழ்ந்திருக்கிறேன். நான் அறியாத பலதரப்பட்ட மக்களை எனக்கு உதவும்படி தேவன் எழுப்பிவந்திருக்கிறார். என்னை அறியாத பலர் மூலமாய் என்னையும் என் குடும்பத்தையும் தேவன் பல நேரங்களில் போஷித்திருக்கிறார்!

1975–ஆம் ஆண்டில், **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையை அச்சடித்து வந்த ‘பாபுஜி’ அச்சகத்திற்கு நான் 300 ரூபாய் செலுத்த வேண்டியிருந்தது. என் கையில் பணம் இல்லாதிருந்ததால், அதை நான் செலுத்துவதில் தாமதம் ஏற்பட்டது. ஒரு வியாழக்கிழமை அன்று, ‘வருகின்ற திங்கள் அப்பணத்தைச் செலுத்திவிடுவேன்’ என்று அதன் மேலாளரிடம் கூறிவிட்டேன். ஆனால் எனக்கோ அதைப் பெறுவதற்கு எவ்வித வருமானமும் இல்லை. தேவனிடத்தில் ஜெபத்தில் அதைக் கூறிவிட்டு, சமாதானமாய் இருந்துவிட்டேன். அந்த ஞாயிறு வரை எனக்குத் தேவையான பணம் வரவில்லை.

திங்கட்கிழமைக் காலையில், என் தபால்பெட்டியைத் திறந்து பார்த்தபோது, தென்னிந்தியாவின் மதுரைக்கும் தூத்துக்குடிக்கும் இடையில் உள்ள நாகலாபுரம் என்று ஒரு சிறு கிராமத்திலிருந்து ஒரு கவர் வந்திருந்தது. அதில் குறுக்குவரியிடாத (க்ராஸ் செய்யப்படாத) ரூ. 300 க்கான வரைவோலை (டிமான்ட் டிராப்ட்) இருந்தது. அன்றைய நாளின் தேவைக்கு அப்பணம் போதும். நான் வாக்குக் கொடுத்த வண்ணமாகவே, அந்த அச்சகத்திற்கு நான் செலுத்த வேண்டிய பணத்தைச் செலுத்த தேவன் எனக்கு உதவி செய்தார். தேவனுக்கே மகிமை!

பல வருடங்களுக்குப் பின், நாகலாபுரம் கிராமத்திற்குச் சென்று அவரை நான் சந்தித்தேன். அவர் ஒரு செருப்பு தைக்கும் ஏழைத் தொழிலாளி என்று அறிந்து ஆச்சரியப்பட்டேன்.

என்னைப் பார்த்ததினால் அவர் மிகவும் சந்தோஷப்பட்டார். அவர், “சார், ஒரு வியாழக்கிழமை அன்று, என்னிடத்தில் அப்போதிருந்த ரூ. 300 – ஐ **அழைப்பின் எதிரொலி ஊழியங்களுக்கு** அனுப்பும்படி யாரோ என் இருதயத்தில் வற்புறுத்திப் பேசியதாக உணர்ந்தேன். எனவே, அத்தொகையை நான் வெள்ளிக்கிழமை உங்களுக்கு அனுப்பினேன். உங்களுக்கு அது திங்கட் கிழமை கிடைத்தது” என்று அவர் கூறினார்.



இவ்வாறு கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என் வாழ்வில் அற்புதங்களைச் செய்கிறார். எந்த நிரந்தர உதவிகளும், எங்களுக்கு இல்லாத போதிலும் இவ்வாறு என்னை அறியாத மக்கள் மூலமாய் நமது எல்லா தேவைகளையும் சந்தித்து வருகிறார்.

ஆம், இது ஒரு கடினமான பாதைதான். தேவனது மகிமையை நான் ஒவ்வொரு நாளும் கண்டு வருகிறேன். கர்த்தர் என் மேய்ப்பர். எனக்கு ஒரு குறைவும் இல்லை.

************

... 6–ம் பக்கத் தொடர்ச்சி

ஞாயிற்றுக்கிழமையை, பாரம்பரியமாக அனுசரித்து வந்துள்ளனர். மத்தியக் கிழக்கு நாடுகளில் வெள்ளிக்கிழமை விடுமுறை நாளாக உள்ளது; நீங்கள் அங்கு வசிப்பவர்களாயிருந்தால், வெள்ளிக்கிழமை ஆராதனைக்குச் செல்வது உங்களுக்கும் வாடிக்கையாயிருக்கும்.

வெள்ளியோ, சனிக்கிழமையோ அல்லது ஞாயிற்றுக்கிழமையோ எந்த நாளாயிருந்தாலும் நீங்கள் அந்நாளைப் பரிசுத்தமாக ஆசரிக்க வேண்டும். ... **ஆகையால், கர்த்தர் ஓய்வுநாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார்.** யாத்திராகமம் 20:11 என்ற கட்டளையின்படி இந்நாளைக் கர்த்தருக்கென்று பிரதானப்

படுத்தி, அவரைத் தொழுதுகொள்ளவும் அதிகநேரம் கர்த்தருக்கென்று செலவிடவும் அர்ப்பணிக்க வேண்டும்.

ஆலயத்திற்குச் செல்லுவதற்குப் பதில், அதிக நேரம் தூங்கவும், வாகனத்தை வெகுதூரம் ஓட்டிச் செல்வதுமே ஓய்வு நாளில் செய்ய வேண்டியதென சிலர் எண்ணுகின்றனர். ஆனால், நண்பர்களே! அந்த நாள் தேவனுக்குரியது; ஆகையால், ... **இராயனுடையதை இராயனுக்கும், தேவனுடையதை தேவனுக்கும் செலுத்துங்கள்...** மத்தேயு 22:21. வாரத்தில் ஒருநாள் தேவனுடைய நாள் – அதை அவரிடமிருந்து திருடாதீர்கள்.

துரதிருஷ்டவசமாக, நாம் நமது முன்னுரிமைகளை மாற்றிவிட்டோம்; நமது சொந்த வேலைகளெல்லாம் முடிந்த பிறகு, மிச்சம், மீதியுள்ள நேரத்தைத்தான் ஆண்டவருக்குக் கொடுக்கிறோம். 'என்னுடைய வேலைகளை யார் செய்வது?', 'தேர்வில் வெற்றிபெற ஞாயிற்றுக்கிழமை சிறப்பு வகுப்புகளுக்குச் செல்ல வேண்டும்', 'இன்று இந்தப் போட்டியில் விளையாட வேண்டும்; தேவன் எனக்கு பெலன் தருவார்.' என்றெல்லாம் நாம் சாக்குப்போக்கு சொல்லுகிறோம். இதெல்லாம் நியாயமான காரணங்கள்தான். ஆனால் 'இதனால் நான் யாரை மகிமைப்படுத்துகிறேன்?' என்று நம்மை நாமே கேட்டுக்கொள்ள வேண்டும். **நீங்கள் ... எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்.** 1 கொரிந்தியர் 10:31.

நாம் உண்மையாகவே தேவனை மகிமைப்படுத்துகிறோமா? என்பதுதான் ஆழமான கேள்வியாகும்.

### 5. நீ எங்கே விழுந்தாயென்பதை நினைவு கூருவாயாக!

**ஆகையால், நீ இன்ன நிலைமையிலிருந்து விழுந்தாயென்பதை நினைத்து, மனந்திரும்பி, ஆதியில் செய்த கிரியைகளைச் செய்வாயாக; இல்லாவிட்டால் நான் சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்து, நீ மனந்திரும்பாத பட்சத்தில், உன் விளக்குத் தண்டை அதனிடத்தினின்று நீக்கிவிடுவேன்.** வெளிப்படுத்துதல் 2:5.

இவ்வருடத்தின் துவக்கத்திலேயே நாம், நமது வாழ்க்கையில் எங்கே விழுந்துள்ளோம்? எதைச் செய்ய வேண்டும்? எதை நிறுத்த வேண்டும்? என்பதை ஆராய்ந்து பார்ப்போம். நாம் அவரிடம் திரும்புமாறு தேவன் இப்போது மென்மையாக அழைக்கிறார்.



**மனந்திரும்பி, ஆதியில் செய்த கிரியைகளைச் செய்வாயாக!**

அவரிடம் வாருங்கள். அன்பும், நம்பிக்கையும் நிறைந்த தம் கரங்களை விரித்தவராய் அவர் காத்துக் கொண்டிருக்கிறார். அவருடைய அன்பு, இரக்கம், தயவைப் பெற்றுக்கொள்ள நாம் தகுதியற்றவர்களாய் உணரும்போதுகூட, நமக்கு அவருடைய கிருபை தேவை என அறிந்து அவர் சிலுவையில் மரித்தார்; அவராலேயன்றி நம்மால் ஒன்றும் செய்ய இயலாது.

அவர் நமது பாவங்களை மன்னிக்கவும், நமது உடைந்த துண்டுகளை எடுத்து புதிதாய் உருவாக்கவும் ஆயத்தமாயிருக்கிறார். நமது உடைந்து போன வாழ்க்கையை அழகானதாய் மாற்ற அவரிடம் நம்மை அர்ப்பணிக்க ஆயத்தமா? என்பதுதான் கேள்வி!

கனியும், பலனுமுள்ள புத்தாண்டை உடையவர்களாயிருங்கள். பலருடைய வாழ்க்கையை அவரது அன்பினால் நீங்கள் தொட்டு, கிறிஸ்துவின் ஒளியாய்ப் பிரகாசித்து, உங்களைச் சுற்றியுள்ள உலகில் ஒரு மாற்றத்தை உண்டு பண்ணுவீர்களாக!

*******

## அவசரத் தேவை

**அழைப்பின் எதிரொலி ஊழியங்கள்** அமோக வளர்ச்சியடைந்து வருவதால் ஊழிய தரிசனமும், பிரதிஷ்டையும், உண்மையும் உள்ள கீழ்க்காணும் பொறுப்புகளை ஏற்க ஆண், பெண் ஊழியர்கள் தேவை.

- **தலைமை சபைக்கு பிரதிஷ்டை செய்யப்பட்ட முழுநேர உதவி ஊழியர்கள்**
- **சென்னையில் உள்ள கிளை சபைகளுக்கு பிரதிஷ்டை செய்யப்பட்ட முழுநேரப் போதகர்கள்**
- **முழுநேர செக்யூரிட்டிப் பணியாளர்கள்**
- **DTP மற்றும் தட்டச்சு தெரிந்தவர்கள்**
- **ஆங்கிலம் மற்றும் இதர மொழிகளில் பேச அல்லது எழுத தேர்ச்சி பெற்றவர்கள்**
- **நிர்வாகத்தில் ஆர்வமுள்ள அலுவலக மேலாளர்கள்**
- **முழுநேர வேதாகமக் கல்லூரி விரிவுரையாளர்கள்**
- **ஊழிய வளர்ச்சிப் பணியாளர்கள்**
- **முழுநேர வாகன ஓட்டுநர்கள்**
- **மெட்ரிகுலேஷன் பள்ளிகளுக்கான ஆசிரியர்கள் மற்றும் முதல்வர்கள்**
- **அழைப்பின் எதிரொலி பத்திரிகை ஆசிரியர் குழுவில் செயல்பட தன்னார்வ உறுதுணையாளர்கள்** (Hon.Co-ordinators)
- **முழுநேர சமையல் பெண்கள்**
- **முழு நேர துப்புரவு பணியாளர்கள்**

**தகுதிக்கேற்ப மாத சம்பளம் வழங்கப்படும்**

**அழைப்பின் எதிரொலி** அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம்
அல்லது வாட்ஸ்அப் எண் : **98412 71858**
மின்னஞ்சல் : sam@echoofhiscall.org மூலம் விண்ணப்பிக்கலாம்.

RNI NO. 67380/93. Postal Regn. No. TN/CH/(C)/197/24-26 WPP NO. TN/PMG(CCR)/WPP-158/24-26

## அழைப்பின் எதிரொலி

### YouTube (யூடியூப்)

உங்களுக்கு நேரம் கிடைக்கும் போது நமது அழைப்பின் எதிரொலி (ECHO OF HIS CALL) யூடியூப் (YouTube) சேனலைப் பார்த்து Subscribe செய்ய வேண்டுகிறோம். நன்றி!

– ஆசிரியர்

## OUR BANK DETAILS:

### 1. Bank : State Bank of India

Branch : Triplicane, Chennai-5
Name : S. Sam Selva Raj
A/C No. : 1023 2934 679
IFSC : SBIN 00 00 249
SWIFT CODE : SBI NIN BB 455

### 2. Bank : ICICI Bank

Branch : Anna Salai, Chennai-6
Name : Echo of His Call
A/C No. : 6038 0502 2319
IFSC : ICIC 000 6038

### 3. Bank : State Bank of India

(This Account is for Tax Exemption for Indians only )

Branch : Triplicane, Chennai-5
Name : Echo of His Call Educational Trust
A/C No. : 1023 2923 805
IFSC : SBIN 00 00 249

Google Pay: 98410 71858
PayPal : SAM SELVA RAJ
*****
E.mail : sam@echoofhiscall.org

## அழைப்பின் எதிரொலி ஊழியங்கள்

**மாதப் பத்திரிகை 16 மொழிகளில், வேதாகமக் கல்லூரிகள், தபால் வழிக் கல்விகள், சபைகளை ஸ்தாபித்தல், கிராம ஆங்கில உயர்நிலைப் பள்ளி, சுவிசேஷ அச்சகம், சுவிசேஷம், கருத்தாய்வுகள், சமூக சேவைகள் மற்றும் ஏனைய செயல்பாடுகள்**

❋ வருட சந்தா ரூ. 100/– ❋ ஆயுள் சந்தா ரூ. 2000/–

☞ **அழைப்பின் எதிரொலி** ஊழியத்தின் பல்வேறு ஊழியங்கள், நமது பங்காளர்களால் அளிக்கப்படும் சுயவிருப்பக் காணிக்கை மற்றும் நன்கொடைகளினால் நடைபெற்று வருகின்றன. தேவன் உங்கள் உள்ளத்தில் அளித்த விருப்பத்தின்படி நமது ஊழியங்களைத் தாங்கும்படி கேட்டுக்கொள்கிறோம். சுவிசேஷம் சென்றடையாத இடங்களில் சுவிசேஷத்தினை கொண்டு சேர்த்திட மற்றும் சபைகள் ஸ்தாபிக்கப்பட உங்கள் உதவி எங்களுக்கு தேவை.

☞ உங்கள் விலாசம் அல்லது மின்னஞ்சல் மாறினால், உங்கள் பழைய விலாசத்தையும் புதிய விலாசத்தையும், புதிய மின்னஞ்சலையும், உங்கள் பதிவு எண்ணையும் உடனே எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை உங்களுக்குத் தவறாமல் கிடைக்க வேண்டுமானால் எங்களுக்குக் கடிதம் எழுதுங்கள்.

☞ நம் **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைகள் 16 மொழிகளிலும் நமது இணையதளங்களில் (Websites) வெளியாகின்றன. அவற்றிலிருந்து படித்தும், பதிவிறக்கம் செய்தும் பயன்பெறுங்கள்.

☞ உங்கள் கடிதங்கள், ஜெப விண்ணப்பங்கள், காணிக்கைகள் முதலியவற்றை காசோலை (Cheque), மணிஆர்டர் (M.O.) அல்லது டிமாண்ட் டிராப்ட் (D.D.) **NEFT, PayPal (Sam Selva Raj, sam@echoofhiscall.org) PhonePe (98410 71858), Gpay (98410 71858), Western Union, MoneyGram**, etc. மூலம் **Echo of His Call** என்ற பெயரில் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்புங்கள். Online மூலமாகவும் அனுப்பலாம்.

☞ உங்கள் E.mail முகவரி மற்றும் செல்போன் / தொலைபேசி எண்களை எங்களுக்கு அனுப்புங்கள். தேவைப்படும்போது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையை E.mail மூலம் அனுப்ப உதவியாக இருக்கும்.

**சகோதர, சகோதரிகளே எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்.** 1 தெசலோனிக்கேயர் 5:25.

**அழைப்பின் எதிரொலி,**
**10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.**
தொலைபேசி : (+91 – 44) 2852 8282, 2852 9293, 2854 7766 செல்: (+91) 98410 71852, 95661 31858
**E.mails : sam@echoofhiscall.org / biblecor@yahoo.co.in**
**Websites : www.echoofhiscall.org / www.stpaulsmatriculation.com**

**YOU CAN SEND YOUR DONATION ONLINE ALSO**

**Regd. with the RNI under No. 67380/93**
**Licenced to post without pre-payment**
**Postal Regn. No. TN/CH/(C)/197/24-26**
**Licence No. WPP - TN/PMG(CCR)/WPP-158/2024-26**
**Date of Publication: last week of previous month**
**Date of Posting : 27th & 28th of previous month**
**Posted at "Egmore RMS / 1 Patrika Channel"**
**on 28th DECEMBER 2024**
**If un-delivered please return to:**
**ECHO OF HIS CALL (TAMIL)**
**P.O. Box No. 2957, Chepauk, Chennai - 600 005, INDIA.**
**Phone: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766**

***JESUS LOVES YOU!***

**To**

***GOD BLESS YOU!***

Owned and published by **S. Sam Selva Raj** from New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005 and printed by **S. Sam Selva Raj** at **Echo of His Call Printers,** New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005. Editor: **S. Sam Selva Raj.**